# தேம்பாவணி உணர்த்தும் ஒழுக்க நெறிகள்

*முனைவர் தே. தேன்மொழி*
உதவிப் பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6409

## முன்னுரை

தனிமனித ஒழுக்கம், சமுதாய ஏற்றத்தாழ்வு ஆகியவை அதிகரித்த காலத்தில் அவற்றை ஒழுங்குபடுத்து வதற்காகத்தான் அற இலக்கியம் தோன்றுகிறது. சாதாரண குடிமக்களுக்கும் மன்னனுக்கும் கூட ஒழுக்கத் தை அறத்தைப் போதிக்கவும் கடைப் பிடிக்கச் செய்யவும் தான் நீதி இலக் கியம் படைக்கப்பட்டது.

அற இலக்கியங்கள் மட்டுமல்லாமல் கதை மூலமாக நீதி உரைக்க வேண்டும் என்பதற்காக உருவானவை தான் காப்பியங்கள். அத்தகைய வழியில் வந்த தேம்பாவணி உணர்த்தும் ஒழுக்க நெறிகளை எடுத்தியம்பும்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## இலக்கியங்கள்

தமிழ்மொழியில் அமைந்துள்ள இலக்கியங்கள் மனித குலத்தை இன்புறுத்தி அதன் வழியே அற ஒழுக்கத்தை உணர்த்தும் வலிமையுடையதாக விளங்குகிறது. இலக்கியங்கள் இவ்வாழ்க்கை முறையைத்தான் மனித மனத்திற்கு உணர்த்துகின்றன. மக்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் உயர்வாக மதிக்கப்படுவது இல்லை. அவர்களில் அற ஒழுக்கம் உடையவர்களே உயர்ந்தவர்கள் என மக்களால் மதிக்கப்படுகிறார்கள். அற ஒழுக்கம் உள்ள ஒருவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகிறது. அவன் வாழ்க்கையில் மென்மேலும் உயர்கிறான்.

நம் இலக்கியங்களில், பெரியோர்களால் நல்ல செயல்கள் எது எது வென்று கூறப்பட்டிருக்கின்றனவோ, அவையெல்லாம் அற ஒழுக்கம் என்று கருதிட வேண்டும். மனம், மொழி, மெய்களைத் தீயநெறியில் செல்லவிடாமல் தடுத்து, நன்னெறியில் நிறுத்த, நம் இலக்கியங்கள் துணைபுரிகின்றன. மனிதன் படித்த பாடத்தை மறந்துவிட்டால், மீண்டும் படித்து அறிவைப் பெற முடியும். அற ஒழுக்கத்தைத் தவறவிட்டால் அவனது குடிப்பிறப்பு எவ்வளவு உயர்ந்ததாயினும் அதன் பெருமை மங்கிவிடும். கல்வியைக் காட்டிலும் அற ஒழுக்கமே சிறந்தது. அற ஒழுக்கமும், பண்பாடும் வளர்ந்தால்தான் வாழ்க்கை முழுமையாக நிறைவுபெறும் என்பதை உணரவேண்டும். அந்த அற ஒழுக்கத்தைக் கற்றுத்தரக் கூடிய, மனதிற்கு இன்பத்தைத் தரக் கூடிய இலக்கியங்களைக் கற்று, அதன் வழி, அற ஒழுக்கத்தோடு வாழவேண்டும்.

அற ஒழுக்கத்தை உணர்த்தும் நூல்கள் இருவகை. ஒன்று நேரடியாக அறம் உணர்த்துவது, மற்றொன்று மறைமுகமாக உணர்த்துவது. அற ஒழுக்கத்தை நேரடியாக உணர்த்தினால் அது கற்பவருக்கும் கேட்பவருக்கும் சற்றுக் கடினமாக இருக்கும், ஏற்றுக்கொள்வதும் அரிதாகும். ஆதலால் மறைமுகமாக சான்றோர் உரைத்தனர்.

ஒழுக்கத்தின் நெறியில் நிற்றலால் மேன்மை அடைதல் உறுதி. ஒழுக்கம் தவறினால் தாங்க முடியாத பழியைப் பெறுவதும் உறுதி என்கிறார் வள்ளுவர். மனிதன் தன் சுற்றத்தரோடு தொடர்பு கௌள்ளுதலில் தனிமனித ஒழுக்கம் அவசியமாகிறது. அவ்வொழுக்க முறையினை வகுத்தும் தொகுத்தும் நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

## ஒழுக்க - நெறி

ஒழுக்கம் குறிக்கும் "மாரல்" என்னும், ஆங்கிலச் சொல் "மோர்சு" என்ற இலத்தின் மொழிச்சொல்லின் திரிபாகும். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள், வழக்கமாக கொள்ளும் முடிவை ஒழுக்கமாகக் கொண்டனர். ஒழுகு, ஒழுக்கு என்னும் சொற்கள் ஒழுக்கம் என்னும் சொல்லாக மலர்ந்தது என்பதை,

"மனித இனத்திற்யேயுரிய தனிப் பண்புகள் பல, அவற்றுள் ஒழுக்கம் முதன்மையானதாகப் போற்றப்படுகிறது. ஒழுக்கம் என்னும் சொல் ஒழுகு வேர்ச்சொல்லடியாகப் பிறந்ததாகும். ஒழுகு என்னும் சொல்லிற்கு இடையறாது கடைப்பிடித்தல் என்பது பொருள். இடையறாது நீர் ஒழுகுவதை ஒழுக்கு என்று கூறுவதைப் போல வாழ்க்கையில் உயர்ந்தவையெனக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்தும் எவ்விடத்தும் இடையறாது மேற்கொண்டொழுகுவதே ஒழுக்கமாகும்"

எனக் குறிப்பிடுவார் மு.வரதராசனார். (வரதராசனார், மு, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, *1977. ப.20.)*

ஒழுக்கம் என்னும் சொல் சீலம், நன்னடத்தை, ஆசாரம், உயர்ச்சி முறைத்தன்மை, உலக ஓம்பிய நெறி போன்றப்பல பொருள்களைத் தருகிறது. தனி மனித ஒழுக்க கூறுகள்,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினு ஓம்பப் படும்"**

**(திருக்குறள்-131)**

என்னும் குறளடியில் நல்லொழுக்கம் ஒருவனுக்கு மேன்மையைக் கொடுப்பதால் நல்லொழுக்கம் உயிரை விடவும் மேலானதாகக் கருதப்பட்டுக் காப்பாற்றப்படுதல் வேண்டும் என வள்ளவப் பெருந்தகை வலியுறுத்துகிறார்.

ஒருவன் ஒழுக்கத்தால் தன்னையும் தன்னைச் சாரந்தவர்களையும் மேம்பாடடையச் செய்யலாம். தனி மனித ஒழுக்கம் சமுதாயத்தோடு தொடர்பு உடையது என்பதனை குன்றக்குடி அடிகளார், "ஒழுக்கம் என்பது ஒன்றல்ல - இரண்டல்ல பல கூறுகளை உடையது எனினும் இரண்டு பெரும் பிரிவாக ஒழுக்க நெறியை வகைப்படுத்தலாம். தனிமனிதன் தன்னுடைய வாழ்க்கை வட்டத்தில் தனக்காகக் கடைப் பிடிக்கும் ஒழுக்கம் ஒன்று, பிறிதொன்று தனிமனிதன் தான் வாழும் சமுதாயத்தோடு தொடர்பு கொள்ளும் முறையில் கடைப் பிடிக்கும் ஒழுக்கம் ஆகும்.

**"பரிந்து ஓம்பிக் காக்க, ஒழுக்கம்,**
**தெரிந்து ஓம்பித்**
**தேரினும், அஃதேதுணை"**

**(திருக்குறள் - 132)**

எத்துனை இடையூறுகள் நேர்ந்தாலும் ஒழுக்கத்தை விடாது கடைபிடித்தல் வேண்டும். எத்துணை ஆராய்ந்து தெளிந்தாலும் வாழ்க்கைத் துணையாய்க் கடைசி வரை காக்க வல்லது ஒழுக்கமே என்கிறார் வள்ளவப் பெருந்தகை.

## தேம்பாவணி

கிறித்துவ சமயத்தார் தமிழுக்கு அளித்த இலக்கியக் கொடைகளில் முதன்மை பெறுவது தேம்பாவணி ஆகும். இதனைத் தந்தவர்

இத்தாலிய நாட்டுக் கவிஞர் சோஜப் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் ஆவார். இவர் தமிழ் நாட்டில் சமயப்பணி ஆற்றுவதற்காக கி.பி.1711 ஆம் ஆண்டு மே 8ஆம் நாள் மதுரைக்கு வந்தார். இவர் தமிழ், வடமொழி, தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். சுப்பிர தீபக் கவிராயரிடம் இவர் தமிழ் பயின்றார். தான் பெற்ற தமிழ்ப் புலமையால் சூசையப்பர் வரலாற்றைச் செந்தமிழ்க் காவியமாகத் தேமபாவணி என்ற பெயரில் இயற்றினார். இந்நூல் கிறித்துவத் தமிழ்க் காவியங்களில் தலைமைத் தன்மை கொண்டது. இதனால் மதுரைத் தமிழ்ச் சங்கம் இந்நூலின் நயங்களைப் பாராட்டி அவருக்கு வீரமாமுனிவர் என்ற பட்டம் அளித்தது. எனவே வீரமாமுனிவர் என்ற பெயரைத் தந்த மாபெரும் இலக்கியம் தேம்பாவணி ஆகும்.

தேம்பாவணி அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை உணர்த்தும் பெருங்காப்பியங்களின் வரிசை நூலைச் சேர்ந்ததாகும். இது மூன்று காண்டங்களைக் கொண்டது. 3615 செய்யுட்களையும், 36 படலங்களையும் கொண்டதாகும். காப்பிய இலக்கணப்படி நாட்டுப்படலம், நகரப் படலம் கூறிய பின், காப்பியத் தலைவனாகிய வளன் வரலாறு கூறப்பெறுகிறது. இது வேதநூல் முறையைக் கர்ண பரம்பரைக் கதையோடும், புனைந்து ரைகளுடனும் கூறி மங்கல முடிவைக் கொண்டு நிறைவு பெறுகிறது. இதில் திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட நூல்களில் காணப்படுகின்ற அறக்கருத்துகள் தழுவப் பெற்று அமைந்துள்ளன எனலாம்.

## ஆசிரியர்பண்பு

ஆசிரியர் எனப்படுவோர் தான் முதலில் நன்கு கல்வியைக் கற்றுப் பிறகு மாணவர்களுக்கு ஐயம் ஏற்படாத வண்ணம் கல்வியைப் புகட்ட வேண்டும்.

சூல் கொண்ட நீல மேகம் தவழ்கின்ற அழகிய மலைகள், தாம் குடித்த நீரைக் கொப்பளித்தமையால் அமுதம் போன்ற அருவிகள் ஓசையை எழுப்பி, அலையை வீசி உருண்டு ஓடுவதைப் போல, படித்த நூற்பொருளை மாணவர்களின் கூட்டம் பயன்பெறும் வண்ணம் ஓசையோடு, விரித்து உரைக்கும் பண்பினை உடையவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும் என்பதை,

**"படித்தநூல் அவை பயன்பட விரித்து ரைப பவர்போல்,**
**தடித்தநீல் முகில் தவழ்தலை பொலிந்த பொன் மலையே,**
**குடித்த நீரெலாம் கொப்புளித்து, அமுதென அருவி**
**இடித்து, அறாஒலி எழத் திரை எறிந்து உருண்டு இரிவ"**

***(நாட்டுப்படலம், பா. 4)***

என்ற பாடல்வழி விளக்குகிறது.

## ஐம்புலன்கள் அடக்கம்

மனிதனின் வாழ்வுக்குத் துன்பம் தருவன ஐம்புலன்களால் ஏற்படும் உணர்வுகளாகும். அவ்வுணர்வுகளை அடக்கி வாழ்வதுதான் மனித ஒழுக்க நெறியாகும்.

ஐம்புலன்களின் வழியே மனம் செல்லாதவாறு தடுத்து அறவழியில் செலுத்துவது தான் மனித உயிரின் கடமையாகும் என்பதை,

**"செறி உலாம் புனல் சிறைசெய்து, பயன்பட ஓதுக்கி,**
**வெறி உலாம் மலர் மிடைந்து, அகல் வயல்வழி, விடுவார்**
**பொறி உலாம் வழி போக்கிலது இயல்பட அடக்கி,**
**நெறி உலாவு அறம்நேர், அவை நிறுத்தினர் போன்றே"**

***(நாட்டுப்படலம்,பா.10)***

என்ற பாடலின் மூலம் ஆறாக ஓடிவரும் நீரை ஏரியில் தேக்கி வைத்து, வயலுக்குப் பயன்படும் வண்ணம் வாய்க்கால் வழியாக நெறிப்படுத்தி உழவர்கள் வயல்களில்

பாயவிடுவர். அதுபோல மனதை அதன் விருப்பப்படி செல்லவிடாது, கேள்விச் செல்வத்தால் அறனும் பொருளும் வழாது, தன் பெருமையை நோக்கி அறிவைச் செலுத்துதல் எண்ணியதை முடிப்பதற்குரிய ஆற்றலைத் தரும் என்பதை எடுத்துரைக்கிறது.

**இன்னா செய்தாரைப் பொறுத்தல்**

உலகில் சமயநெறிகள் அனைத்தும் மக்களின் வாழ்வியலுக்கு ஏற்ற நெறிமுறைகளைக் குறிப்பிடுகின்றன. நெறிமுறைகளில் மிக இன்றியமையாததாக மனித குலத்திற்குக் கூறப்பெறுவது மன்னிக்கும் குணம் அனைவருக்கும் வேண்டும் என்பதாகும். அதிலும் தனக்குத் தீங்கு செய்தவர்களின் தீமையைப் பொறுத்து அவர்களை மன்னித்தல வேண்டும் என்பது சிறந்த அறமாக எல்லாச் சமயமும் கூறுகின்றன. தேம்பாவணியில் இக்கருத்தை வலியுறுத்தும்வகையில்,

**"துய்யம் தாய்உரித் தொடர்பினார், சுடப்புகன் றவர்க்கும்**
**மய்யம் தாவிய மனத்துஎழும் அன்பின் நன்று இயற்றல்**
**நொய்அம் தாதுகள் நோவ, உள் குடைந்துஇமிர் அளிக்கும்**
**செய்அம் தாமரை நினைப்ப, நல் விருந்துஇடும் போன்றே"**

**(ஈரறம்பொருத்து படலம், பா.60)**

என்ற பாடலில் குளிர்ந்த இலைகளையும், தாதுக்களையும் உடைய பூக்கள், தாதுக்களை உண்பதற்காகத் துன்பப்படுத்திய வண்டுகளுக்குத் தேனைக் கொடுப்பது போல,

அன்புடைய வளனாரும் மரியாளும் தங்களைப் பற்றிக் கொடிய சொற்களால் ஏசியவர்களுக்கும், தங்களுடைய மனத்தில் தோன்றிய அன்பினால் அவர்கள் கூறியதைப் பொருட்படுத்தாது அவர்களுக்கு விருந்து படைத்த காட்சி மூலம் விளக்குகிறது.

**இல்லற, துறவறமேன்மை**

அறம், இல்லறம் துறவறம் இரண்டையும் அனுபவித்து அதில் மேன்மை அடைவது தான் சிறந்தது என்பதை,

**"ஈரறம் பிரிந்து நோக்கில், இயம்பிய துறவின் மாட்சி**
**பேரறம் ஆவ தன்றி, பிரிவிலா இரண்டு, தம்முள்**
**ஓரற மாகச் சேர்க்கில், உறுதியும் பயனும் ஓங்கத்**
**தேர்அற மாகும் என்றான் செழுந்துறைக் கேள்வி மூத்தோன்"**

**(பாவமாட்சிப்படலம்,பா.40)**

என்ற பாடல் மூலம் இல்லறம், துறவறம் என்ற இரண்டில் துறவறமே சிறந்தது என்றாலும், இரண்டையும் ஓர் அறமாகக் கொண்டு வாழ்ந்தால் வாழ்வில் உறுதியும் பயனும் கிடைத்திடும் என்பதை வலியுறுத்துகிறது.

**சான்றோர் பண்பு**

கல்வியை நன்கு கற்ற சான்றோர்கள் உலக இன்பங்களை வெறுத்து வீட்டுப் பேற்றை விரும்பி நிற்பர். எனவே சான்றோர்க்கு உரிய அறம் உலக இன்பத்தைவிடப் பேரின்பத்தை விரும்புவதே ஆகும். இதனைத் தேம்பாவணி,

**"அஞ்சி லாஎதிர் அடுக்கிய கல்லெலாம் கடந்தே.**
**எஞ்சி லாஎழில் இழுதைத்தநீள் மருதமும் நீக்கித்,**
**துஞ்சி லாநதி, தொடர்ந்துஅகல் கருங்கடல் நோக்கல்,**
**விஞ்சை யாரெலாம் வெறுத்துவீடு இவறிய போன்றே"**

**(நாட்டுப்படலம், பா. 8)**

என்ற பாடலில் அருவியாக வீழ்ந்து ஆற்று நீராக ஓடிய நீர், குறிஞ்சியையும் மருதத்தையும் கடந்து, நெய்தல் நிலமாகிய கடலில் போய்க் கலந்தது, அறிவுடையோர் உலக இன்பங்களைத் துறந்து வீடு பேற்றை விரும்பியதைப் போன்றது ஆகும் என்பதை உணர்த்துகிறது.

### அறமற்ற பொருளை விரும்பாமை

ஐம்புலனை அடக்கி வாழும் சான்றோர் பெருமக்கள் அறம் அல்லாத நிலையில் தங்களிடத்தில் பொருள் வந்து சேருமானால் அதனை வெறுத்து ஒதுக்கிவிடுவர் என்பதை,

**"நோக்க, இன்புஉளம் நுகர, ஒண் முளரியோடு ஆம்பல்**
**நீக்க லாது . எலா நீர்மலர் களையெனக் கட்டல்,**
**ஆக்கம் ஆக்கினும் அறனிழந்து ஆவது கேடென்று**
**ஊக்க(ம்) மாண்பினர், ஒருங்குஅவை ஒழிக்குதல் போன்றே"**

**(நாட்டுப்படலம், பா. 13)**

என்ற பாடலில், வயலில் முளைத்துள்ள ஒளி மிக்கதும், மணம் கொண்டது மான தாமரைப் பூவினையும், ஆம்பல் பூவினையும் உதவாத களைகள் என்று உழத்தியர் பிடுங்கி எறிவர். ஏனெனில், அறநெறி தவறி வரும் செல்வம் ஆக்கத்தை உண்டாக்கினாலும், கெடுதலை உடையதே என்று சான்றோர் அதனை நீக்கி விடுவர் என்பது பாட்டின் பொருளாகும். இப்பாடலில் நெல்விளையும் வயலில் நெல்லுக்கு மாறாக அழகும் மணமும் பொருந்திய தாமரை மலர்கள் உள்ளிட்டவை சிறந்தவை என்றாலும் அவை களையாகக் கருதப்படும் என்பதை வலியுறுத்துகிறது.

### விருந்தோம்பல்பண்பு

முகமலரச்சியோடு விருந்தினரை வரவேற்று உபசரிப்பவன் இல்லத்தில் திருமகள் அதாவது செல்வமகள் இனிது அமர்ந்து உறைவாள் என்பதை வலியுறுத்தும் வகையில் விருந்தோம்பல் பண்பினை தேம்பாவணி,

**"இருந்து ஓடிய திரு, இங்கணில் இனிது அன்புற இடலால்,**
**பருந்தோடுறும் நிழலென்று, உயர் பயன் ஈன்றிடும் எனவே,**
**மருந்தோடுஇகல் அரிதுஅன்பு, உளம் மலிகின்றன மரபோர்,**
**விருந்தோடுஉண விருகின்றனர் இலையென்று,**
**உளம் மெலிவார்" (நகரப்படலம், பா. 63)**

என்ற பாடலில் விருந்தினர்க்கு உணவு படைக்கும் அறம் பொருட் செல்வத்தைக் காக்கும். விருந்தினரைப் பெறமுடியாது எருசலேம் நகரத்து மக்கள் வாடுவதால் விருந்தோம்பல் செய்யாத நிலை ஏற்படுகிறது. அதனால் பொருளின் பயனும், அறத்தின் பயனும் கிடைக்காமல் போய் விடுகிறதே என்று வருந்திய நிலையில் அப்பண்பு வெளிப்படுகிறது.

### முடிவுரை

காப்பியத்திற்கு உரிய இலக்கணங்கள் பொருந்தி பாடப்பெற்ற இக்காவியம் தமிழர்தம் மரபுகளையும், கொள்கைகளையும் குறைவு படாது விளக்கும் ஒரு பெரு நூலாகும். தேம்பாவணியின் ஆசிரியர் வீரமாமுனிவர் தமிழ்நாட்டில் கிறித்துவப்பணி செய்த பொழுது தமிழை நன்கு கற்று, சிலப்பதிகாரம், சிந்தாமணி உள்ளிட்ட காப்பியங்களைக் கற்று, அவைகளின் சாயலில் தேம்பாவணியைப் படைத்துள்ளமை பெருமைக்கு உரியதாகும். தமிழ்க் காப்பியங்களின் சந்தங்களும், அமைப்புக்களும் பொருந்தும் வண்ணம் தேம்பாவணி பாடப் பெற்றுள்ளது. தமிழ்க் காப்பியங்களுக்கு ஏற்ப அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருள்களை வலியுறுத்தும் காப்பியமாகவும் மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளை வலியுறுத்தும் காப்பியமாகவும் இது அமைந்துள்ளது.

### துணை நின்றவை


1. ரா.லே.ஆரோக்கியம் பிள்ளை, தேம்பாவணி, தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, டிசம்பர்-1964.
2. வி.மரிய அந்தோணி, தேம்பாவணி - மூலமும் உரையும், வீரமாமுனிவர் ஆய்வுக் கழகம், பாளையங்கோட்டை, 1982. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் (Tamil Virtual Academy)
3. வரதராசனார், மு, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1977. ப.20.)
4. பரிமேலழகர்(உ.ஆ) திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1975. பா.131)